செ.வெ.எண்:39 நாள்:23.06.2021

## நாமக்கல் மாவட்டம்

## கொல்லிமலை பகுதியை சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியர்கள் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் பாடங்கள் பயில்வதை ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.

------

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், நெடுஞ்சாலைத்துறை பயணியர் மாளிகையில் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (22.06.2021) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வட்டார மருத்துவ அலுவலரிடம் கொல்லிமலை பகுதியில் கொரோனா நோய்த்தொற்றின் தன்மை குறித்தும், வீடு வீடாக சென்று பொதுமக்களின் ஆக்சிஜன் அளவு, உடல் வெப்ப நிலை பரிசோதனை செய்யும் பணிகள் குறித்தும், குழந்தை திருமணங்கள் நடைபெறுகிறதா என்றும், வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அறுவை சிகிச்சைகள் குறித்தும் பொதுமக்களின் சுகாதார விழிப்புணர்வு நிலைக்குறித்தும் கேட்டறிந்தார். வட்டார மருத்துவ அலுவலர் பதிலளிக்கையில் கொல்லிமலை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 110 தன்னார்வாலர்கள் மூலம் வீடு, வீடாக சென்று ஆக்சிஜன் அளவு சரிப்பார்க்கப்படுகின்றது. கிராமத்தில் உள்ள நபர்களே தன்னார்வாலர்களான பணிப்புரிந்து வருகின்றார்கள். இப்பகுதியில் வீடுகள் மற்றும் கிராமங்கள் குறிப்பிட்ட இடைவெளியில் இருப்பதாலும், மக்கள் நெருக்கம் அதிக அளவில் இல்லாததாலும், கொரோனா நோய்த்தொற்றின் பரவல் அதிகம் இல்லை என்று தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொல்லிமலை பகுதியை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் கல்வி பயில உள்ள பள்ளிகளின் வசதிகள் குறித்து கேட்டறிந்தார். இதற்கு அலுவலர்கள் தெரிவிக்கையில், கொல்லிமலை பகுதியில் 47 தொடக்கப்பள்ளிகளில் 2,069 மாணவ, மாணவியர்களும், 16 நடுப்பள்ளிகள் மூலமாக 1,908 மாணவ, மாணவியர்களும், 4 உயர்நிலைப்பள்ளிகள் மூலமாக 375 மாணவ, மாணவியர்களும், 5 மேல்நிலைப்பள்ளிகளின் மூலமாக 2,030 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 72 அரசுப்பள்ளிகளின் மூலமாக 6,382 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். மேலும், 3 தனியார் பள்ளிகள் மூலமாக 464 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள் என்று தெரிவித்தார்கள்.

பழங்குடியினர் நல அலவலர் தெரிவிக்கையில், கொல்லிமலை பகுதி பள்ளிகளில் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பள்ளிக்காட்டுப்பட்டி, செங்கரை, மலையாளப்பட்டி என 3 தொடக்கப்பள்ளிகள் மூலமாக 205 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். மேலும், வாழவந்தி நாடு, செங்கரை, முள்ளுக்குறிச்சி ஆண்கள், முள்ளுக்குறிச்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி என 4 மேல்நிலைப்பள்ளிகள் வாயிலாக

1,473 மாணவ, மாணவியர்களும் பயின்று வருகின்றார்கள். செங்கரையில் பழங்குடியின மாணவர்களுக்கான சி.பி.எஸ்.சி பாடத்திட்டத்தின் கீழ் ஏகலைவா உண்டு உறைவிட பள்ளியில் 342 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள் என்று தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு முதலமைச்சர் கல்வி தொலைக்காட்சியின் மூலம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாடங்கள் கற்பிப்பதை தொடங்கி வைத்துள்ளார்கள். மேலும் பிற தனியார் தொலைக்காட்சிகளிலும் இந்த பாடங்கள் தொடர்ந்து ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொல்லிமலை பகுதி மாணவ, மாணவியர்கள் அனைவரும் தமிழக அரசின் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் பாடங்கள் பயில்வதை ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், பழங்குடியினர் நலத்துறையினர் உறுதி செய்திட வேண்டும். அதற்காக கல்வி தொலைக்காட்சியில் வகுப்புகள் வாரியாக பாடங்கள் தொலைக்காட்சிகளில் ஒளிப்பரப்பு நேரம் குறித்த விவரங்களை மாணவ, மாணவியர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார். கொல்லிமலை பகுதியில் பொதுமக்களின் இருப்பிட பகுதிக்கே சென்று அப்பகுதியில் உள்ள அரசு பள்ளிக்கூட கட்டடம், அரசு கட்டடங்களில் தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொள்ள வட்டார மருத்துவ அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வாசலூர் பட்டி பகுதியில் பொதுமக்களிடம் கொரோனா நோய்த்தொற்றின் தீவிரம் பற்றி எடுத்துரைத்து, கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், அப்பகுதியில் 10-ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவி ஜோதிகா சிங்காரத்திடம் தமிழக அரசின் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சி வாயிலாக ஒளிப்பரப்பப்படும் பாடங்களை தொலைக்காட்சி வாயிலாக பார்வையிட்டு பயில வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். உனது ஆசை என்னவென்று கேட்டதற்கு தான் படித்து முடித்து டாக்டராக விரும்புவதாக அந்த மாணவி தெரிவித்தார்.

தனியார் நிறுவனத்தின் பங்களிப்பின் மூலம் பணிபுரிந்து வரும் வாசலூர் பட்டி பகுதியை சேர்ந்த ஆசிரியை த.ஜானகியிடம் ஸ்மார்ட் போன் கைபேசி மூலம் ஆன்லைன் முறையில் அவரது கற்பித்தல் பணி குறித்தும், கொல்லிமலை பகுதியில் உள்ள பழங்குடியின மாணவர்கள் தேர்வுகள் எழுதி, அரசு பணிகளில் சேர்ந்தவர்கள் குறித்த விவரங்கள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துரையாடினார்.

அதனைத்தொடர்ந்து, வாசலூர் பட்டி, திண்ணனூர் நாடு பகுதிகளில் பொதுமக்களிடம் கொரோனா நோய்த்தொற்றின் தீவிரம் பற்றி எடுத்துரைத்து, கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் தங்களுக்கு காய்ச்சல், உடல்வலி, தலைவலி, வயிற்றுப்போக்கு ஆகிய பாதிப்புகள் இருந்தாலோ, கடந்த 10 நாட்களுக்குள் இவற்றால் பாதிக்கப்பட்டு இருந்தாலோ உடனே ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ அல்லது கொல்லிமலை அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவ ஆலோசனை பெற்று, தேவைப்பட்டால் பரிசோதனை செய்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.அ.மாதேஸ்வரி, மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் திரு.ப.இராமசாமி, செய்தி மக்கள் தொடர்பு அலவலர் திரு.சி.சீனிவாசன், கொல்லிமலை வட்டார மருத்துவ அலுவலர் மரு.புஷ்பராஜ், கொல்லிமலை வட்டாட்சியர் திரு.ராஜ்குமார், கொல்லிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.க.நடராஜன், க.ரவிச்சந்திரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.